***கவனிக்க.***-*2023.07.21 ஆந் திகதிய 2342 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2343 - 2023 ජූලි මස 28 වැනි සිකුරාදා - 2023.07.28**

*2343 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 226 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 226 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.***-

(i) *குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் 2023, யூலை மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒகத்து மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

#### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


225 - B 082477- 353 (2023/07)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

**அறிவித்தல்**

**107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்**

கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்தினுள் சிங்கள மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திரு. தொன் ஜோதிரத்ன ஜயசிங்க அவர்களின் 2022.12.16 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

கே. டீ. என். ரஞ்சித் அசோக,
செயலாளர்,
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்,
மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு.

கொழும்பு,
2023, யூன் 30.

07- 294

---

# நானாவித அறிவித்தல்கள்

**இலங்கை சுகாதார ஆய்வு மற்றும் புத்தாக்கத்திற்கான நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

உபுல் கலப்பத்தி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை சுகாதார ஆய்வு மற்றும் புத்தாக்கத்திற்கான நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) மருத்துவக்கல்விப் போதனையை மேற்கொள்வது, மனிதவள அபிவிருத்தி மற்றும் ஆன்மீக சுகாதாரம் உட்பட சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பது;

(ஆ) மருத்துவ ஆய்வு முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் அறிவியல் புத்தாக்கத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(இ) தலைமைத்துவ திறமையினை ஊக்குவித்தல், நோயாளர்களை குணப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும், சமூகக் கல்வி ஆர்வலர்கள் மற்றும் சுகாதார நலச் சேவைகளில் ஈடுபாடுள்ளோர்கள் ஆகியோருக்காக பயிற்சி வசதிகளை வழங்குதல்,

பிறவும்.

உபுல் கலப்பத்தி,
பாராளுமன்ற உறுப்பினர்.

07- 295

## நிறுவனங்கள் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

## APPLICATION FOR LICENCE FROM REGISTRAR GENERAL OF THE COMPANIES;

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 34 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திற்கு, "அகசவ் அறக்கட்டளை" (AGASAV FOUNDATION) என்ற பெயர் மற்றும் அமைப்பில், அதன் பெயருடன் ஒரு பகுதியாக "வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட" எனும் சொற்றொடர் பயன்படுத்தப்படாமல் நிறுவனங்களின் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமத்தை பெற்றுக்கொள்வதற்காக இவ் விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்படுகின்றது.*

*இந்த அமைப்பை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட குறிக்கோள்கள் பின்வருமாறு-*

**குறிக்கோள்கள்** ( Objectives)

*1. பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களுக்கு விசேட கவனம் செலுத்தி எமது பாரம்பரிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் அனுபவத்தையும் பயன்படுத்தி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் சகல மக்களின் பெருமையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பை உருவாக்கும் ஒரு சிலருக்கு இடமளிக்காமல், ஒரே சட்டம் ஒரே இலங்கை என்ற தொனிப்பொருளின் கீழ் சகல வளமும் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒரே நாடு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி நாட்டின் நற்பெயரையும் தாய் நாட்டின் சுதந்திரத்தையும் பாதுகாப்பதுடன், இதனை எதிர்ப்பவர்களிடமிருந்தும் பாதுகாத்தல்.*

*2. இலங்கையில் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட அனைத்து துறைகளிலும், பௌத்த கோட்பாடுகளுக்கு கண்டிப்பாக இணங்கி, விவசாயம், கைத்தொழில்கள் மற்றும் சேவைகளின் இயற்கையாகவும் சமூக ரீதியாகவும் சாத்தியமானதொழில்களில் ஈடுபடுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட திறன் கொண்ட தொழில்சார் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தேர்வு செய்து, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்களை ஒழுங்கமைத்தல், திறன்களை ஊக்குவித்தல் மற்றும் திறமையானவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குதல், இத்தகைய நடவடிக்கைகளுக்கு மாத்திரமே அறக்கட்டளையின் ஊக்குவிப்பு உதவி வழங்கப்படும்.*

*3. கட்டிட நிர்மாணப்பணி, உலோகத் தயாரிப்புக்கள், மின்சாரம் மற்றும் மின்னணுவியல், மோட்டார் இயந்திரத் துறை, மரவேலை மற்றும் தச்சுத் தொழில் துறைகளில் திறன்களை மேம்படுத்தல்.*

*4. கலாச்சார கல்வி, சுகாதாரம், விவசாயம், நல்வாழ்வு, சமய நல்லிணக்கம், குறிப்பாக மருத்துவத்துறை, விவசாயத்துறை மற்றும் கலைத்துறை தொடர்பான பாரம்பரிய மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி மக்களிடையே பிரபலப்படுத்துதல்.*

*5. சுத்தமான நீர் வளங்களுடன், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் நிறைந்த சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலம் சுத்தமான மற்றும் பசுமையான நாட்டை உருவாக்க இலங்கையர்களுக்கு தெளிவூட்டல்.*

*6. சுகாதார கல்வி நிகழ்சித் திட்டங்களின் ஊடாக சிறந்த சுகாதார அறிவை உருவாக்குவதன் மூலம், புற்றுநோய், சிறுநீரக நோய், அத்துடன் தலசீமியா, டெங்கு போன்ற நோய்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.*

*7. எமது இலங்கையில் தற்போதுள்ள சட்ட முறைமையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளுக்காக முன் நிற்பதுடன், குழந்தைகளுக்கான சட்ட ரீதியான உதவிகளை வழங்குவதன் மூலமும், "வாழ்வதற்கான உரிமை" என்ற கோட்பாட்டைப் பாதுகாப்பதன் மூலமும் மனித உரிமைகள் மற்றும் பிற உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணித்தல்.*

*8. அறக்கட்டளையின் நோக்கங்களை அடைவதற்காக, பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல், புத்தகங்களை அச்சிடுதல் போன்ற முக்கியமான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.*

*9. அரசாங்கத்தின் விவகாரங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான பொது நலனுக்காக, சாதி, மத, வேறுபாடின்றி, சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்றவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதும் அறக்கட்டளையின் நோக்கமாகும்.*

*இந் நிறுவனம் ஆரம்ப அல்லது இரண்டாம் நிலை கல்விக்கானது அல்ல.*

*நிறுவனத்தின் கட்டுரைகளை, நிறுவன அலுவலகத்தில் ஆய்வு செய்யலாம். இல.130, மாளிகாகந்த வீதி, கொழும்பு 10.*

இந்த விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் எந்தவொரு நபர், நிறுவனம் அல்லது கூட்டுத்தபானத்திற்கு அத்தகைய ஆட்சேபனைகளை இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் அல்லது அதற்கு முன்னதாக நிறுவன பதிவாளர் நாயகம், இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும்.

எஸ்.பி.மொரக்க அசோசியேட்ஸ் (தனியார்)
நிறுவனம்,
நிறுவனத்தின் செயலாளர்கள்.

2023, யூன் 25.

07 - 335

---

**ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்**

**மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் ( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் ( கொழும்பில் நடைபெறுகின்றது)**

வழக்கு இலக்கம்:
CHC 33/ 2023/ CO
தன்மை: கம்பனி
நடைமுறை: சுருக்கம்

கொழும்பு -04, பௌத்தாலோக மாவத்தை, இல. 102 எனும் முகவரியில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஏசியா லேசிர் ( பிரைவட்) லிமிட்டெட் ( PV 17260) ஒடுக்குதல் பற்றிய விடயம் தொடர்பானது.

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட இல. 7 இன் 270(ந), 270(க) ஆம் பிரிவுகள் மற்றும் பகுதி XII ஆகியவற்றின் கீழ் நீதிமன்ற உத்தரவின் மூலம் முடிவுறுத்தலுக்கான விண்ணப்பம் தொடர்பில்,

1. மீஸ்டன் அமரசிறி குணவர்தன,
இல.151/16,
முதலாவது ஒழுங்கை,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

2. ஷிராணி நிரஞ்சலா குணவர்தன,
இல.151/15,
முதலாவது ஒழுங்கை,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

3. லசந்தி நிரஞ்சலா அமரசிறி குணவர்தன,
இல.181/1,
பொதேஜு வீதி, கொழும்பு-05.

4. தமித அமரசிறி குணவர்தன,
இல.151/15,
முதலாவது ஒழுங்கை,
ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ.

5. சமன் பிரசாந்த் வீரசிங்க,
இல.14,
சுலைமான் டெரஸ், ஜாவத்தை வீதி,
கொழும்பு -05.

6. சுனிலா தர்ஷனி டி அல்விஸ்,
யட்டியான, அகலவத்தை.

7. திலீப் சேனியா டி அல்விஸ்,
யட்டியான, அகலவத்தை.

8. ராஜீவ் திஸ்ஸ டி அல்விஸ்,
யட்டியான, அகலவத்தை.

*மனுதாரர்கள்*

*குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண, நீதிமன்றத்தினால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக, கொழும்பு-04, பௌத்தாலோக மாவத்தை, இல. 102 எனும் முகவரியில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஏசியா லேசிர் ( பிரைவட்) லிமிட்டெட் (PV17260) இனால் 2023, மே 04 ஆந் திகதி அந்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதெனவும், அம்மனு 2023, ஓகத்து 29 ஆந் திகதி நீதிமன்றத்தில் முன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது எனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எம். ஜே. எஸ். பொன்சேக்கா,
*சட்டத்தரணி,*
இல. *171*, போபிட்டிய, பமுனுகம.

**குறிப்பு**: *அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. எம். ஜே. எஸ். பொன்சேக்கா, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும் கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுத்தல் வேண்டும்.*

*மனுதாரரின் சட்டத்தரணி.*

*07- 402*